# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 44 /2020

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 17–09–2025.

பெயர் = நாகராஜ் வா.சா.–2

வா.சா.2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) மறவர்பெருங்குடியை சேர்ந்த பாலமுருகன் என்பவரிடம் நான் டிரைவராக இருக்கிறேன். அவருடைய டிராக்டருக்கு டிரைவராக இருக்கிறேன் என்றால் சரிதான். நான் எத்தனை வருடங்களாக டிரைவராக உள்ளேன் என்றால் 15 வருடங்களாக உள்ளேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் டிராக்டரை புஞ்சைக்கு சென்ற விவரம் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதி, பிரதிவாதிகள் இருவர் நிலத்திற்கும் நான் டிராக்டர் வைத்து உழுதிருக்கிறேன் என்றால் சரிதான். வாதி முத்துக்கிருஷ்ணன் நிலத்தை ஒட்டி மேற்கே பரமசிவம் நிலம் உள்ளது என்றால் சரிதான். வாதியிடத்திற்கு வடக்கேயும் பரமசிவம் நிலம் உள்ளது என்றால் சரிதான். வாதி நிலத்திற்கும் பரமசிவம் நிலத்திற்கும் இடையில் வரப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த வரப்பு வழியாகத்தான் வடக்கே உள்ள நிலங்களுக்கு டிராக்டர் கொண்டு சென்று உழுவேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் நிலத்தை உழுவதற்கு வாதி மற்றும் பரமசிவம் இடத்தில் தடம் போட்டு உழுவேன் என்றால் சரிதான். வடக்கே உள்ள பரமசிவம் நிலத்திற்கு வாதி மற்றும் பரமசிவம் இடம் வழியாகச்சென்று பிரதிவாதி இடத்தின் வழியாகவும் சென்று பரமசிவம் இடத்தை உழுவோம் என்றால் சரிதான்.

(2) மேற்சொன்னவாறு 10 வருடமாக உழுதிருப்பேன் என்றால் சரிதான். வாதி நிலத்திற்கு தெற்கே ராமசாமி ரெட்டியார், ராமலிங்கம் ரெட்டியார் ஆகிய இருவர் நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்து முத்துக்கிருஷ்ணனுக்கு பாகப்பிரிவினை படி கிடைத்தது. பாகப்பிரிவினை எந்த வருடம் நடந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது. பாகப்பிரிவினை செய்யப்பட்ட சொத்து வாதியின் அப்பாவுக்கு பூர்வீகமாக அல்லது கிரயமாக சொந்தம் என்றால் கிரயமாக சொந்தம். வாதிக்கும்,

பிரதிவாதிக்கும் இடையே தாவாச்சொத்தில் செல்லக்கூடாது என என் முதலாளியிடம் பஞ்சாயத்து வந்தது என்றால் சரிதான். பிரதிவாதி பேசி முடிக்கச்சொல்லி என் முதலாளியிடம் சொன்னார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் முதலாளி அதில் நான் தலையிடமுடியாது என சொன்னதாக சாட்சி கூறுகிறார். பிரதிவாதிக்கு பஞ்சாயத்து பேசி முடிக்கமுடியாது என சொல்லிவிட்டதால் என் இடத்தை நான் வேறு டிராக்டரை வைத்து உழுதுகொள்கிறேன் என என் முதலாளியிடம் சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். அதற்காக கோபத்தில் என் முதலாளி வாதிக்கு ஆதரவாக என்னை நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க அனுப்பிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதி ஆகியோரின் நிலங்கள் மீனாட்சிபுரம் ரோட்டிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் அனைத்தும் புஞ்சை கரிசல் நிலங்கள் என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் மழைபெய்தால் விவசாயம் என்றால் சரிதான். மேற்படி நிலங்களுக்கு மெயின்ரோடு வழியாகத்தான் வந்து உழுவோம் என்றால் சரியல்ல. காட்டுப்பாதை வழியாகத்தான் வந்து உழுவோம்.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S